# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# M.C.O.P. No.161/2021

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22-ஆம் நாள் வியாழன்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய எ.**ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எ.ம.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

இருசக்கரவாகனத்தை ஓட்டிய ரவியை தவிர நானும் இன்னொரு நபரும் அதில் அமர்ந்து போனோம். இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் போவது விதிமீறல் என்றால் சரிதான். போலீசார் ரவி மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள். வாக்குமூலம் கொடுத்தேன். வாக்குமூலத்தில் விபத்திற்கு காரணம் ரவி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்று தெரியாது. ரவிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரவி எங்க ஊர்க்காரர் தான். இருசக்கர வாகனத்தில் நான் நடுவில் உட்கார்ந்திருந்தேன். சம்பவ ரோடு எசனை காட்டுமாரியம்மன் கோவில் நாவலூர் செல்லும் சாலை. சம்பவ இடத்தில்

போக்குவரத்து அதிகம் இருக்காது என்றால் சரியல்ல. அது கிராமத்து ரோடு என்றால் சரிதான். ரவியின் மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்து குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு ரவியின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், அவர் எங்க ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**நீதிமன்ற கேள்வி**</u>

ரவியின் மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்து குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

<u>**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

இருசக்கர வாகனத்தில் இருபுறமும் கால்களை போட்டு உட்கார்ந்திருந்தேன். எசனையிலிருந்து மேற்கு நோக்கி வந்தேன். இறந்த முத்தையா எதிர் திசையில் வந்தார். அவரக்கு முன்னால் வேறு எந்த வாகனமும் வரவில்லை. முத்தையா இடதுபுறமாக வந்தார் என்றால் சரியல்ல. முத்தையா ஓட்டி வந்த வாகனம் கியர் இல்லாத வாகனம் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்தை மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.